தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

### ரூ. 16 லட்சத்துக்கு கொப்பரை ஏல விற்பனை

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை ரூ. 16 லட்சத்து 39 ஆயிரத்துக்கு கொப்பரை ஏல விற்பனை நடைபெற்றது.

ஏலத்துக்கு, ஈரோடு, கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 456 மூட்டைகளில் 23 ஆயிரத்து 569 கிலோ கொப்பரைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

முதல் தரம் அதிக பட்ச விலையாக கிலோ ரூ. 76.75, மட்ட ரகம் குறைந்த பட்ச விலை ரூ. 52.75-க்கு ஏலம் போனது.

### விவசாயிக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு

குடியாத்தம் அருகே விவசாய நிலத்தில் இருந்த 110 கல் கம்பங்களை உடைத்ததாக தொடரப்பட்ட வழக்கில் விவசாயிக்கு ரூ. 30 ஆயிரம் இழப்பீடு வழங்க வனத்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குடியாத்தத்தை அடுத்த பல்லலகுப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ஈஸ்வரி(40). இவருக்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் பல்லலகுப்பம் காப்புக் காட்டை ஒட்டி உள்ளது. வன எல்லையில் இந்த நிலம் உள்ளதால், வன விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்க இவர் நிலத்தைச் சுற்றி கல் கம்பம் நட்டு, முள்கம்பி வேலி அமைத்திருந்தாராம்.

கடந்த 2008-ஆம் ஆண்டு அங்கு வந்த வனத்துறையினர், ஏதேதோ காரணம் கூறி ஈஸ்வரி நிலத்தில் இருந்த 110 கல் கம்பங்களை உடைத்து எறிந்தார்களாம். அவர் நிலத்தில் பயிரிட்டிருந்த மாஞ்செடிகளைச் சேதப்படுத்தி விட்டுச் சென்றார்களாம்.

பாதிக்கப்பட்ட தனக்கு இழப்பீடு வழங்கக் கோரி, வழக்குரைஞர் கே. மோகன் மூலம் ஈஸ்வரி சார்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி எஸ். கண்ணன், ஈஸ்வரிக்குச் சொந்தமான நிலத்தில் இருந்த கல் கம்பங்களை உடைத்ததற்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்க வனத் துறைக்கு உத்தரவிட்டு வியாழக்கிழமை தீர்ப்பளித்தார்.

மேலும், ஈஸ்வரிக்குச் சொந்தமான நிலத்தில், அவரது சுவாதீன உரிமையை வனத் துறையினர் தடை செய்யாதிருக்க நிரந்தர தடை உத்தரவும் பிறப்பித்து உத்தரவிட்டார்.

### இன்று முதல் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை முதல் (ஜனவரி 24) கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக முதல்வரால் கடந்த 2011-ஆம் ஆண்டு விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழகத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக 31 மாவட்டங்களில் 3 லட்சத்து 61 ஆயிரத்து 122 பயனாளிகளுக்கு, 14 லட்சத்து 44 ஆயிரத்து 488 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில் 32 ஆயிரத்து 44 பயனாளிகளுக்கு 32 ஆயிரத்து 44 கறவைப் பசுக்களும் (2011-12, 2012-13, டிசம்பர் 2013 வரை) வழங்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 234 பயனாளிகளுக்கு 56 ஆயிரத்து 936 வெள்ளாடுகளும், 2 ஆயிரத்து 600 பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 600 கறவைப் பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் ஜனவரி 24 மற்றும் 25 அகிய 2 நாள்களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறவுள்ளது.

விலையில்லா கால்நடைகள் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் உலர் தீவனம் வழங்க 4 இடங்களில் தீவன மையங்கள்**

கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் விநியோகிக்க நாமக்கல் மாவட்டத்தில் 4 இடங்களில் தீவன மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி இரண்டாவது வாரம் முதல் இந்த மையங்களில் உலர் தீவனம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறையைத் தீர்க்க வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தீவன மையங்கள் அமைத்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட், களங்காணி, மோர்பாளையம், மாணிக்கம்பாளையம் ஆகிய நான்கு இடங்களிலுள்ள கால்நடை மருந்தக வளாகத்தில் கால்நடை உலர் தீவன மையங்கள் அமைத்து, அதன்மூலம் வைக்கோல், சோளத்தட்டு ஆகியவை கிலோ ரூ.2 வீதம் மானிய விலையில் உலர் தீவனங்கள் வழங்கப்பட உள்ளன.  இந்த மையங்கள் மூலம் ஒரு கால்நடைக்கு

நாள்தோறும் 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு உரிய தீவனம் ஒரேநேரத்தில் வழங்கப்படும்.ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்துக்கு தேவையான தீவனமாக 105 கிலோ ஒரே நேரத்தில் வழங்கப்பட உள்ளது.

உலர் தீவனம் தேவைப்படும் விவசாயிகள் குடும்ப அட்டையை அருகே உள்ள கால்நடை மருந்தகத்துக்கு எடுத்துச் சென்று தங்களது பெயரை முதன் முறையாகப் பதிவு செய்து கொண்டு, அங்கு கால்நடை பராமரிப்புத் துறையால் வழங்கப்படும் தீவன அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து, அந்த அடையாள அட்டையைத் தீவன மையங்களில் காண்பித்து உலர் தீவனத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நாமக்கல் மாவட்டத்தில் இந்த மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் திட்டம் பிப்ரவரி 2ஆவது வாரத்திலிருந்து செயல்படுத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் தீவனம் வழங்க வலியுறுத்தல்**

க. பரமத்தி ஒன்றியத்தில் உள்ள 30 ஊராட்சிகளையும் வறட்சி பகுதிகளாக அறிவித்து கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும் என வியாழக்கிழமை நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

க.பரமத்தி ஒன்றியத்தில் உள்ள 30 ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டம் க. பரமத்தி ஊராட்சி அலுவலக அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது. ஒன்றிய ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் பெரியசாமி தலைமை வகித்தார். செயலாளர் புன்னம் சுப்பிரமணியம், பொருளாளர் பொன்னுசாமி, மாவட்ட நிர்வாகிகள் பரமத்தி தங்கவேல், நெடுங்கூர் நல்லசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், ஒன்றிய பகுதிகளில் உள்ள ஊராட்சி பகுதிகளுக்கு குடிநீர் பற்றாக்குறையை போக்க சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஒன்றியத்தில் புதியதாக கட்டப்பட்டு இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு

இணைப்பு வழங்க வேண்டும். ஒன்றிய ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று புன்னம் ஊராட்சியில் 50,000 ஏக்கர் விலை நிலங்கள் பாதிக்கும் வகையில் புன்னம் பகுதியில் அமைய இருந்த தனியார் நிறுவனங்களுக்கான சாயப்பட்டறை பூங்காவை வேறு இடத்திற்கு மாற்ற உத்தரவிட்ட முதல்வருக்கும் பரிந்துரை செய்த போக்குவரத்துறை அமைச்சர் ஆகியோருக்கும் க. பரமத்தி ஒன்றிய ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு சார்பில் நன்றி தெரிவிப்பது என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், தலைவர்கள் துரைசாமி, விஜயகுமார், சாரதா, ஜெயரூபி, சண்முகம், கண்ணம்மாள், சரஸ்வதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### 19,410 மீனவர்களுக்கு நிவாரணத் தொகை

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுக்கான நிவாரண உதவித் தொகை, 19,410 பயனாளிகளுக்கு வங்கிமூலம் வழங்கப்பட்டு வருவதாக மீன்துறை துணை இயக்குநர் தெரிவித்தார்.இதுகுறித்து மீன்துறை துணை இயக்குநர் ஆர்.எஸ். கணேசன் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது,

மீன்பிடி குறைந்த காலத்தில், மீனவர்களுக்கு நிவாரண உதவியாக ரூ. 4 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இம் மாவட்டத்தில் 42 மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில், இதுவரை 29 கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 19,410 பயனாளிகளிடம் முன் ஒப்புதல் ரசீது பெற்று அவர்களுக்கு வங்கி வழியாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. கேசவன்புத்தன் துறை ஐ.ஓ.பி. வங்கிக் கிளையில் தமிழ்நாடு தலைமை மீனவர் கூட்டுறவு இணையத் தலைவர் சேவியர் மனோகரன் முன்னிலையில் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

பொழிக்கரை, கொட்டில்பாடு, வாணியக்குடி, குறும்பனை, தூத்தூர், இரவிபுத்தன்துறை உள்ளிட்ட மீனவ கிராமங்களைச் சார்ந்த பயனாளிகளும் வங்கி கணக்கு மூலமாக நிவாரணத் தொகையை பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தில் முன் ஒப்புதல் ரசீது கையொப்பமிட்ட ஏனையத் தகுதியான மீனவப் பயனாளிகளுக்கு, அடுத்த வாரத்துக்குள் நிவாரணத் தொகை முழுமையாக விநியோகம் செய்யப்படும் என்றார் அவர்.

**பசு,ஆடுகளுக்கு இன்று சிறப்பு மருத்துவ முகாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளி, சனி (ஜன. 24, 25) இரு நாட்கள் பசுக்கள், ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடல்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2011-12-ல் 800 பயனாளிகளுக்கு 800 பசுக்களும், 3196 பயனாளிகளுக்கு 12,784 ஆடுகளும், 2012-13-ல் 900 பயனாளிகளுக்கு 900 பசுக்களும், 5326 பயனாளிகளுக்கு 21,304 ஆடுகளும், 2013-14-ல் 650 பயனாளிகளுக்கு 650 பசுக்களும், 3216 பயனாளிகளுக்கு 12,864 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா பசுக்கள் மற்றும் ஆடுகளின் இனப்பெருக்கம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தமிழகம் முழுவதும் வெள்ளி, சனிக்கிழமைகளில் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், ஆடுகளுக்கு குடல்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. பயனாளிகள் மட்டுமல்லாமல், அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடையில் நவீன சாகுபடி யோசனைக்கு சபாஷ்! தண்ணீர் கிணறுகளை தேடும் அதிகாரிகள்

**மதுரை**:மதுரை மாவட்டத்தில் தண்ணீருள்ள கிணறுகளை கண்டறிந்து கோடை சாகுபடியை அதிகரிக்க, விவசாய அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் மழையளவு ஆண்டுக்கு 815 மி.மீ. ஆனால் கடந்த ஆண்டு 520 மி.மீ.,தான் பெய்தது. இதனால், ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 460 எக்டேர் சாகுபடி பரப்பில், 80 ஆயிரம் எக்டேரில்தான் சாகுபடி நடந்துள்ளது. 45 சதவீதம் குறைந்துள்ளது.

இதனால் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. இதுபோலவே மாநில அளவில் இருந்ததால், உணவு உறபத்தி குறைவை சரிக்கட்ட, கோடைகால சாகுபடியை தீவிரப்படுத்தும்படி அரசு உத்தரவிட்டது. கோவையில் விவசாய பல்கலை துணைவேந்தர் தலைமையில் அதிகாரிகள், விஞ்ஞானிகள் ஆலோசனை நடத்தினர்.

இதனை நடைமுறைப்படுத்த, மதுரை அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை, துணை இயக்குனர் ரவிச்சந்திரன் ஆகியோர், ஒவ்வொரு யூனியனிலும் உதவி இயக்குனர், விவசாய அலுவலர்களை பணியில் ஈடுபடுத்தியுள்ளனர்.

நவீன யோசனை: இதன்படி, ஒவ்வொரு கிராமத்திலும், தண்ணீர் உள்ள கிணறுகள் அடையாளம் காண்கின்றனர். அவற்றின் உரிமையாளர்களிடம், அத்தண்ணீரைக் கொண்டு, குறுகிய கால நெல், நவதானியங்கள், பயறு வகைகளை பயிரிட ஆலோசனை வழங்குகின்றனர். அப்பயிர்களுக்கான மானிய திட்டங்களை விளக்கி, இடுபொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். நெல்

பயிரிட்டால், அதை திருந்திய நெல் முறையிலும், கம்பு, சோளம் பயிரிட்டு ஏக்கருக்கு 600 கிலோ பெறுவதைவிட, மக்காச்சோளத்தை பயிரிட்டால் 3 ஆயிரம் கிலோ பெறலாம் எனவும் எடுத்துக் கூறுகின்றனர்.

இதுபோல இருக்கும் கிணற்று நீரைக் கொண்டு அதிகபட்சம் எதை சாகுபடி செய்ய முடியுமோ, அதைச் செய்ய வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் இந்த நிதியாண்டுக்குள், 7 ஆயிரம் எக்டேரில் நெல், 14 ஆயிரம் எக்டேரில் சிறுதானியம், 1900 எக்டேரில் பயறு வகைகளை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயித்து செயல்படுகின்றனர். இதன் மூலம் வறட்சியால் இழந்த உற்பத்தியை, ஈடுசெய்ய முடியும் என
நம்புகின்றனர்.

## விலையில் 'முறுக்கேறிய' முருங்கை

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில், காய்கறிகள் விலை குறைந்துள்ள போதிலும், முருங்கைக்காய் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

காய்கறி வியாபாரிகள் சங்கத் தலைவர் பி.எஸ்.முருகன் கூறியதாவது: நேற்று ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.20, கேரட் 20, பீன்ஸ் 22, பட்டர்பீன்ஸ் 35 முதல் 45, சோயாபீன்ஸ் 40 முதல் 50, முட்டைக்கோஸ் 7, காலிபிளவர் 10 முதல் 15, தக்காளி 8, பூசணி 3, வெண்டைக்காய் 15, டர்னிப் 9, அவரைக்காய் 12, கொத்தவரை 10, புடலங்காய் 9, சவ்சவ் 8, கருணைக்கிழங்கு 30, சேனைக்கிழங்கு 13, பெரிய வெங்காயம் 15 முதல் 18, சின்ன வெங்காயம் 20 முதல் 25, கறிவேப்பிலை 25, கொத்தமல்லி 35, புதினா 10, இஞ்சி 70, பச்சை மிளகாய் 15, நூக்கல் 9, பெரிய பாகற்காய் 15, சிறிய பாகற்காய் 30, பச்சைப் பட்டாணி 25, கீரை 10, சுரைக்காய் 6, பீர்க்கங்காய் 15, முள்ளங்கி ரூ.10க்கு விற்பனையானது.

காய்கறிகள் வரத்து அதிகரிப்பால், விலை குறைந்துள்ளது. அதேசமயம், பனிப்பொழிவால் முருங்கைக்காய் வரத்து குறைந்து, ரூ.50லிருந்து ரூ.150 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் ஒருமாதத்திற்கு இவ்விலை நீடிக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## வயல்களை வளப்படுத்தும் வாத்து மேய்ச்சல் : விவசாயிகள் ஏற்பாடு

ஆனைமலை : ஆனைமலை பகுதிகளில் உள்ள நெல் வயல்களில், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க, இயற்கை முறையில், உரமிடுதலுக்கு வாத்து மேய்ச்சலை விவசாயிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆனைமலை சுற்று பகுதிகளில், ஆழியார் ஆற்று நீரினை பயன்படுத்தி, 1,600 ஹெக்டருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு ஆண்டு முழுவதும் நெல் சாகுபடி செய்யப்படுவதால் இப்பகுதியில் வாத்து வளர்ப்புத் தொழில், உப தொழிலாக உருவாகியுள் ளது. அறுவடைக்குப்பின் நெல் வயல், வாத்து வளர்ப்புக்கு மேய்ச்சல் நிலமாக பயன்படுகிறது.

கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி, சேத்துமடை, உடுமலை, மடத் துக்குளம், பழநி போன்ற இடங்களில் வாத்து வளர்ப் போர் அதிகமாக உள்ளனர். அவர்கள் ஆனைமலை பகுதியில் உள்ள நெல் வயல்களுக்கு, வாத்துகளை மேய்ச்சலுக்கு கொண்டு வந்துள்ளனர். நெல் வயல்களில் நைலான் வலைகளை கொண்டு பட்டி அமைத்து, வாத்துகளை இரவில் அடைத்து வைக்கின்றனர். பகலில், அருகில் உள்ள சேற்று வயல்களில் வாத்துகள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. நெல் வயலில் உள்ள புழு, பூச்சிகளை வாத்துகள் தின்று விடுவதால்,வேளாண்மைக்கு உதவியாக உள் ளது. இதனால் வயலில் வாத்து பட்டி அமைக்க விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பழநி பகுதியில் இருந்து மேய்ச்சலுக்கு வாத்துகளை கொண்டு வந்துள்ள வெள்ளியங்கிரி கூறியதாவது : என்னிடம் தற்போது 1,100 வாத்துகள் உள்ளன. இவற்றை, முட்டை மற்றும் இறைச்சிக்காக வளர்த்து வருகிறேன். பழநியில் அறுவடை பணி முடிந்ததும் இந்த பகுதிக்கு கொண்டு வந்து விடுவேன். தற்போது முட்டைக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் இந்த தொழில் பயன் உள்ளதாக இருக்கிறது

ஆனைமலை பகுதிகளில் நெல் வயல்கள் அதிகம் இருப்பதால் வாத்துகளுக்கு தேவையான உணவு கிடைக்கிறது. அறுவடை செய்யப்பட்ட நெல் வயல்களில், கீழே சிதறியுள்ள நெல்மணிகள், சேற்று வயல்களில் உள்ள புழு, பூச்சிகள்

ஆகியவை வாத்துகளுக்கு விருப்பமான உணவாகும்.
வாத்துகளின் கழிவு, நிலத்திற்கு உரமாக பயன்படுகிறது. இதனால் இங்குள்ள விவசாயிகள் வாத்துகளை தங்கள் வயல்களில் மேய்க்க அழைக்கின்றனர். நடவு பணி தொடங்கும் வரை இங்கு பட்டி அமைத்து வாத்து மேய்ப்போம், பிறகு வேறுபகுதிக்கு சென்று விடுவோம்.இவ்வாறு அவர் கூறினார்.
பெரியணை பகுதி விவசாயி ராதாகிருஷ்ணன் கூறுகையில், ""வாத்துகளை வயல்களில் மேய விடுவதால், பயிருக்கு தீங்கு செய்யும் புழு,பூச்சிகளை தின்று விடுகிறது. இதனால் நோய் தாக்குதலில் இருந்து நாற்றுகளை பாதுகாக்க முடிகிறது. மேலும் வாத்துகளின் கழிவுகள் வயலுக்கு இயற்கை உரமாக கிடைக்கிறது. இதன் காரணமாக பயிர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கிறது. வயல்களில் வாத்து பட்டி அமைக்க கேட்டால், நாங்கள் உடனே அனுமதிக்கிறோம்," என்றார்.

## பட்டு வளர்ப்பில் இயந்திரங்கள் : விவசாயிகளுக்கு பயிற்சி

பொள்ளாச்சி : பொள்ளாச்சியை அடுத்த சிங்காநல்லூரில், "அட்மா' திட்டத்தின் கீழ் பட்டு வளர்ப்பு குறித்து செய்முறை விளக்கம் நடந்தது.
தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட் சிங்காநல்லூர் பகுதியில், பட்டு உற்பத்தி விவசாயிகள் அதிகளவில் உள்ளனர். அவர்கள் பயனடையும் வகையில் இந்நிகழ்ச்சி நடந்தது.
"பட்டு வளர்ப்பில் இயந்திரங்களின் பங்கு' எனும் தலைப்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, தெற்கு அட்மா தலைவர் ரவிசுந்தரம் தலைமை வகித்தார். மத்திய பட்டு வளர்ச்சி வாரிய தொழில் நுட்ப உதவியாளர் பாஸ்கரன், பட்டு வளர்ச்சி துறை இளநிலை உதவியாளர்கள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.
மல்பெரி பயிரிடப்பட்ட நிலத்தில், "மினி வீடர்' இயந்திரத்தைக்கொண்டு உழவு செய்தல் மற்றும் களை எடுத்தல், "பிரஷ் கட்டர்' இயந்திரத்தை கொண்டு கவாத்து செய்தல், "செரி டார்ச்' இயந்திரத்தை கொண்டு புழு வளர்ப்பு மனையில் படுக்கை நாசினி தெளித்தல் குறித்து செய்முறை விளக்கங்கள் காட்டப்பட்டன. மேலும், மனையை பராமரிக்கும் முறைகள் குறித்தும் விளக்கப்பட்டன. தொடர்ந்து,

மல்பெரிச்செடிகளை தாக்கும் இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, துக்காரா புழு ஆகியவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.
பொள்ளாச்சி தனியார் வங்கி ஊழியர்கள் விவசாய கடன் பெறுவது குறித்து விவசாயிகளிடம் பேசினர். இதில், தெற்கு அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் சண்முகபிரியா, வட்டார தொழில் நுட்ப வல்லுனர் பாரதிராஜா மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்

## பண்ணைய வயல்கள் உலக வங்கி குழு ஆய்வு

கள்ளக்குறிச்சி:தச்சூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி வயல்களையும், ஒருங்கிணைந்த பண்ணைய வயல்களையும் உலக வங்கி ஆய்வுக் குழுவினர் ஆய்வு செய்தனர்.
கள்ளக்குறிச்சி தச்சூர் கிராமத்தில் வேளாண் துறையின் நீர்வள, நிலவளத் திட்டத்தில் அமைத்துள்ள திருந்திய நெல் சாகுபடி வயல்களையும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்த வயல்களையும் உலக வங்கி ஆலோசகர் பால்சித்து, வேளாண் இயக்குனர் ராஜேந்திரன், கலெக்டர் சம்பத் பார்வையிட்டனர்.
விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் சக்ரவர்த்தி, துணை இயக்குனர் ராஜேந்திரன், கள்ளக்குறிச்சி உதவி இயக்குனர் தர்மலிங்கம், திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் சாத்தையா உட்பட பலர் பங்கேற்றனர்.

## பனிப்பொழிவால் தர்பூசணி விளைச்சல் பாதிப்பு

திண்டிவனம்:பனிப்பொழிவு அதிகரித்து வருவதால் திண்டிவனம் பகுதியில் தர்பூசனி விளைச்சல் பாதித்துள்ளது.
திண்டிவனம் பகுதி மட்டுமின்றி முருக்கேரி, பிரம்மதேசம், நல்லாளம், மரக்காணம் பகுதிகளிலும் தர்பூசணி பழங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
தர்பூசணியில் படரும் கொடிகள் அனைத்தும் வெப்ப அதிகரிப்பு மூலம் நீண்ட தூரம் செல்லும்.

மாவட்டத்தில் சீதோஷன நிலை மாறியுள்ளதால் இரு மாதங்களாக பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. இதனால் திண்டிவனம் பகுதியில் சாகுபடி செய்துள்ள தர்பூசணி கொடி படராமல் துளிர்க்கும் போதே கருகுகிறது. இந்தாண்டு வெயிலை தணிக்க தர்பூசணி பழங்கள் குறைந்தளவே சாகுபடியாகும். அதிக விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்வர். இதனால் ஏற்படும் நஷ்டத்தால் திண்டிவனம் பகுதியில் தர்பூசணி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

## சந்தையில் குவியும் மாடுகள் வியாபாரிகள் வருகை குறைவு

ஈரோடு: மாட்டு சந்தை திறக்கப்பட்டது குறித்து தகவல் கிடைக்காததால், குறைந்த அளவிலான வியாபாரிகளே வந்திருந்தனர்.

கோமாரி நோய் தாக்குதல் எதிரொலியாக, கடந்த நவ., 10ம் தேதி, ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டு சந்தை மூடப்பட்டது. சந்தையை மீண்டும் திறக்க வேண்டும் என்று டிச., இறுதியில் வியாபாரிகள், விவசாயிகள், இடைத்தரகர்கள் உள்ளிட்டோர் மனு கொடுத்தனர். சில தினங்களுக்கு முன், கோமாரி நோய் தாக்குதல் குறித்து, சென்னையில் நடந்த கால்நடை துறை மருத்துவர்கள் ஆலோசனை கூட்டத்துக்குப்பின், தடையை நீக்க அரசு உத்தரவிட்டது.

கால்நடை சந்தைகள், கடந்த, 10ம் தேதி திறக்கப்பட்டன. ஆனால், ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு, நேற்று முன்தினம் தான் அனுமதி வழங்கப்பட்டது. மாட்டு சந்தை தினமான நேற்று, 600 பசு மற்றும் எருமை மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தன.

பசு மற்றும் எருமை மாடுகள், 14 ஆயிரம் முதல், 32 ஆயிரம் வரை, பல்வேறு விலைகளில் விற்கப்பட்டன. சந்தை நடப்பது குறித்து, நேற்று முன்தினம் வரை, உறுதி செய்ய முடியாததால், பிற மாநில வியாபாரிகள், குறைந்த எண்ணிக்கையில் வந்திருந்தனர். எனவே கணிசமான அளவில் வர்த்தகம் நடந்தது.

இதனால், கால்நடை வளர்ப்போர் ஏமாற்றம் அடைந்தனர். எனினும் வரும் வாரங்களில் தகவல் கிடைத்து, வெளி மாநில வியாபாரிகள் அதிகளவில் மாட்டு சந்தைக்கு வந்து, மாடுகளை வாங்கி செல்வர், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரூ.28 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 28 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை ஏலம் போனது. இங்கு வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில், கொப்பரை ஏலம் நடக்கிறது. தை பொங்கல் விடுமுறைக்கு பின், நேற்று நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப் பகுதி விவசாயிகள், 754 மூட்டைகளில், 37 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரம் கொப்பரை, குறைந்தபட்ச விலையாக கிலோ, 75.25 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 79.50 ரூபாய்க்கும் விற்பனையானது. இரண்டாம் தரம் கொப்பரை, குறைந்தபட்ச விலையாக கிலோ, 50 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 74.55 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 28 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

## இலவச ஆடுகளுக்கான மருத்துவ பரிசோதனை

கருர்: ""இலவச ஆடுகளுக்கான மருத்துவ பரிசோதனை முகாம் இன்றும், நாளையும் நடக்கிறது," என, கரூர் கலெக்டர் ஜெயந்தி கூறினார்.
அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
இலவச கறவை மாடுகள், வெள்ளாடுகள் செம்மறி ஆடுகள், வழங்கும் திட்டங்களில் கீழ் கரூர் மாவட்டத்தில், 2011-12ம் நிதியாண்டில், 1,842 பேருக்கு, 7,368 ஆடுகளை, 24 பஞ்சாயத்துக்களில் வழங்கப்பட்டுள்ளது.
நடப்பாண்டியில் டிசம்பர் முடிய, 17 பஞ்சாயத்துக்களில், 1,137 பயனாளிகளுக்கு, 4,548 ஆடுகளும் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட ஆடுகளில் இருந்து, இதுநாள் வரை, 20 ஆயிரத்து, 569 குட்டிகள் பிறந்துள்ளன.இந்த ஆடுகளுக்கு எடையினை அதிகரிக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழுநீக்க இலவச முகாம் கால்நடை பராமரிப்புத் துறையினரால், சம்பந்தப்பட்ட கிராமங்களில் , 24, 25ம் தேதிகளில் நடத்தப்படுகிறது.எனவே கரூர் மாவட்ட இலவச பயனாளிகள் தங்களது ஆடுகளை முகாமிற்கு கொண்டு வந்து மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளலாம்.
இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை பண்ணை கழிவு பயிற்சி முகாம்

கரூர்: "கால்நடை பண்ணைக் கழிவுகளை பயன்படுத்துதல் குறித்த பயிற்சி அளிக்கப்படும்' என, கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் அகிலா கூறினார்.அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கால்நடை பண்ணை கழிவுகளை பயன்படுத்துதல் குறித்த பயிற்சி முகாம் கரூர் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும், 28ம் தேதி முதல் மார்ச், 3ம்தேதி வரை நடக்கிறது. இதில், மக்கும் உரம், மண்புழுஉரம், சாண எரிவாயு, பஞ்ச கவ்யா தயாரித்தல் மற்றும் பயன்பாடு, கால்நடை பண்ணை கழிவுகள் மூலம் அசோலா தீவனம் உற்பத்தி செய்தல் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும், கோழிப்பண்ணை கழிவுகளை கையாளும் முறைகள், இறந்த கோ ழிகளை மக்கும் உரமாக்குதல், கால்நடை பண்ணை கழிவுகளில் இருந்த எரிதி தயாரித்தல், பற்றிய தெரிந்துகொள்ளலாம். எனவே, இப்பயிற்சியில் கலந்து கொள்ளவிரும்புவோர், 500 ரூபாய் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி பற்றிய விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண்ணை, 04324- 294335 தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தோட்டக்கலை பயிர்கள் தொழில்நுட்ப கருத்தரங்கு

கரூர்: தோட்டக்கலை பயிர் சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து கரூரில் கருத்தரங்கம் நடந்தது.

தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் சார்பில், தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த கருத்தரங்கம் கரூரில் நடந்தது. திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் பாலமோகன் தலைமை வகித்தார்.

தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவன துணை இயக்குனர்

சுரேஷ், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் திரவியம் முன்னிலை வகித்தனர்.

தோட்டக்கலை பயிர்களில் அறுவடைக்குப் பின்சார் தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், பயிர்களில் மதிப்புக்கூட்டுதலின் முக்கியத்துவம், தேவை அடிப்படையில் தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி குறித்து பியிற்சி அளிக்கப்பட்டது.

மரவள்ளி பயிரில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், மஞ்சள் பயிரில் விதை நேர்த்தி, துல்லிய பண்ணையம் மூலம் சாகுபடி, கிழங்கு அழுகல், செதில் பூச்சி மேலாண்மை, பதப்படுத்துதல், தொழில்நுட்பங்கள், மெருகூட்டுதல், நிறமூட்டுதல், தரம்பிரித்தல்.


சேமிக்கும் முறைகள், சந்தைப்படுத்துதல் குறித்து ஆலோசனைகளை வழங்கினர்.

சின்ன வெங்காய சாகுபடி பற்றிய புதிய தொழில் நுட்பங்களையும், மூலிகைப்பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.முகாமில் பேராசிரியர்கள் நீலாவதி, ஜீவஜோதி, புகழேந்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசு குறைப்பு



நாமக்கல்: நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம்' நேற்று நடைபெற்றது. இதில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலையில், 10 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் விலை 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை குறைந்து வருவதால் நாமக்கல் மண்டலத்திலும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இதே விலைக்கு தான் வியாபாரிகளும் பண்ணைகளில் முட்டை வாங்கி செல்கின்றனர். இதற்கு மேல் விலையை குறைத்து கொடுக்க வேண்டாம் என என்.இ.சி.சி. பண்ணையாளர்களை அறிவுறுத்தியுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.59, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.75 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### தக்காளி கிலோ ரூ.2க்கு விற்பனை : மிளகாய் விலையும் குறைந்தது



ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி, பச்சை மிளகாய், சின்ன வெங்காயம் கடும் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தக்காளி ஒரு கிலோ ரூ.2க்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு திண்டுக்கல் சுற்று பகுதிகளில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. மணப்பாறை, துவரங்குறிச்சி, பழநி, அய்யம்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து பச்சை சம்பா மிளகாய்களும், உருண்டை மிளகாய்களும் அதிக அளவில் வரத் தொடங்கியுள்ளன. கடந்த வாரம் கிலோ ரூ.15க¢கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று ரூ.2க்கு விற்பனையானது. மேலும், கடந்த மாதம் சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.60க¢கு விற்பனையானது. தற்போது சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்து கிலோ ரூ.15 முதல் ரூ.18 வரை விற்பனையானது. போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

**பொள்ளாச்சி சந்தையில் ஆடு விற்பனை அமோகம்**



பொள்ளாச்சி: பொள்ளாச்சி சந்தையில் வெகுநாட்களுக்கு பிறகு நேற்று ஆடு விற்பனை அதிகளவில் நடந்தது. அதிகபட்சமாக ஒரு ஆடு ரூ.5ஆயிரம் வரை விலை போனது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் அருகே உள்ள மாட்டுசந்தையின் ஒரு பகுதியில் வியாழக்கிழமை தோறும் ஆட்டு சந்தை நடைபெறும். சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தும் உடுமலை, கணியூர், மடத்துக்குளம், கிணத்துகடவு, சூல்தான்பேட்டை, பழனி உள்ளிட்ட இடங்களில் இருந்தும் விவசாயிகள் ஆடுகளை விற்பனைக்காக கொண்டு வருவார்கள். கோமாரி நோய் காரணமாக விதிக்கப்பட்ட தடை தற்போது நீக்கப்பட்டதால், வெகுநாட்களுக்கு பிறகு நேற்று

நடந்த சந்தையில் ஆடு விற்பனை ஜோராாக நடந்தது. இதில், சுமார் 3 கிலோ முதல் 13 கிலோ எடை உள்ளஆடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இதில் குறிப்பிட்ட ஆடுகள் ரூ.3ஆயிரம் முதல் முதல் ரூ.5 ஆயிரம் வரை விலை போனது.

## சூரியகாந்தி அறுவடை விதைப்பு முடிவுகள் எடுக்க விவசாயிகளுக்கு பரிந்துரை

திருச்சி, : சூரியகாந்தி அறுவடையின்போது விதைப்பு முடிவுகள் எடுக்க விவசாயிகளுக்கு வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் பரிந்துரை செய்துள்ளது.

இந்தியாவில் சூரியகாந்தி மிக முக்கியமான எண்ணெய் வித்து பயிர்களில் ஒன்றாகும். சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்து பயிர்களில் இது 4வது இடத்தை பெற்றுள் ளது. உலகளவில் 2013-14ல் மொத்த சூரியகாந்தி விதை உற்பத்தி 42.77மில்லியன் டன்னாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2012-13ல் இதன் உற்பத்தி 36.40 மில்லியன் டன்களாக இருந்தது.

சூரியகாந்தி உற்பத்தி யில் இந்தியா (1.87சதவீதம்) முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் 2013-14 க் கான உணவு எண்ணெய் இறக்குமதியில் பாமாயில் 8.4 மில்லியன் டன்கள், சோயா எண்ணெய் 1.3 மில் லியன் டன்கள், சூரியகாந்தி எண்ணெய் 1.2 மில்லியன் டன்கள் மற்றும் இதர உணவு எண்ணெய் 10ஆயி ரம் டன்கள் இறக்குமதி செய்யப்படும் என இறக்கு மதி முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய நிர்வாக இயக்குனர் செல் வம், வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) சந்திரசேகரன் ஆகியோர் கூறு கையில், இந்தியாவில் 2013-14ஆண்டு கரீப் பருவத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 1.85லட்சம் டன் கள் ஆகும். இது 2012-13ல் 1.50 லட்சம் டன்கள் ஆக இருந்தது. கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் (2011- 12)ல் சூரியகாந்தி பயிரிடும் பரப்பு 13,610 எக்டேராகும். இதன் உற்பத்தி 41,711 டன் னாக இருந்தது.

தமிழ்நாட்டில் சூரியகாந்தி சாகுபடியின் நிலப்பரப்பில் 80 சதவீதத்தையும், உற்பத்தியில் 49 சதவீதத்தையும் கரூர், திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங் கள் பங்களிக்கின்றன. தமிழ் நாட் டில் தற்போது விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பதற்கு நிலத்தை ஆயத்தம் செய்து வருகின்றனர்.

சூரியகாந்தி விதைப்பு முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தக வல் மையம், திருப்பூர் மாவட்டம் வெள்ளகோ வில் ஒழுங்குமுறை விற் பனை கூடத்தில் 13 வருடங்களாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது.

அறுவடை சமயத்தில் மார்ச்-ஏப்ரல் 2014ல் ஒரு கிலோவுக்கு ரூ.34 முதல் ரூ.36 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளது. தற் போது சூரியகாந்தி விதை யின் விலை கிலோ ரூ.35 ஆகும். கடந்த வருடம் அறு வடை காலத்தில் (2013 மார்ச்சில்) ஒரு கிலோ ரூ.33-36 என்ற விலை நில வியது. இந்த விலையின் அடிப்படையில் திருச்சி மாவட் டம் தா.பேட்டை, முசிறி, துறையூர், உப்பிலியபுரம், தொட்டியம் உள்ளிட்ட பகுதி விவசாயிகள் நல்ல விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது என்றனர்.

**பனியால் நெற்பயிர்கள் பாதிப்பு**

காரைக்குடி, : பருவ மழை கைவிட்ட நிலையில் தற்போது நெற்பயிர்கள் பனியால் சாய்ந்து வருவதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

காரைக்குடி அருகே கூத்தலூர் ஊராட்சிக்கு உட்பட்டது அணைத்திடல். இங்கு 300க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. 100 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் உள்ளன. இங்குள்ள பிளாக் கண்மாய், கற்பிலா கண்மாய், அணை கண்மாய், நெற்குட்டான் கண்மாய், புது கண்மாய்களை நம்பி விவசாய பணிகள் நடந்து வந்தது. மழையை நம்பியே இந்த கண்மாய்கள் நிறைந்து வருகிறது. தற்போது மழை பொய்த்து விட்டதால் கண்மாய்கள் அனைத்தும் வறண்டு காணப்படுகிறது. இதனால் கண்மாய்களை நம்பி விவசாயம் செய்யும் சுமார் 60

ஏக்கருக்கு மேல் நிலம் தரிசாக முட்புதர் மண்டி கிடக்கிறது. கிணற்று பாசனத்தை நம்பி 18 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. இதில் கல்சர், குண்டு நெல், ஏடிஎம் 5 ஆகிய ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த டிசம்பர் மாதம் விதைப்பு செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் கதிர் விட்டு விளைந்துள்ளன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடும் பனி மற்றும் பலத்த காற்றால் விளைந்த நிலையில் உள்ள அனைத்து பயிர்களும் கிழே விழுந்துள்ளன. இதனால் கதிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயி அமல்ராஜ் கூறுகையில், 'மழை இல்லாததால் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயம் செய்யப்பட்டது. தற்போது பனியால் 18 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கதிர் விட்ட நிலையில் நெல்மணிகள் கீழே விழுந்ததால் விளைந்தும் பயன் இல்லாமல் போய் விட்டது. வைக்கோல் மட்டுமே மிச்சம். ஒரு ஏக்கருக்கு 40 முதல் 45 மூடை நெல் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு உரம், பூச்சி மருந்து என ரூ.12 ஆயிரம் வரை கடன் வாங்கி செலவு செய்துள்ளோம். கீழே விழுந்ததால் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பயிர் இன்சூரன்ஸ் செய்து முறையாக நிவாரண நிதி கிடைக்காவில்லை. இதனால் இந்த ஆண்டு பயிர் இன்சூரன்ஸ் செய்யவில்லை. வாங்கிய கடனை செலுத்த முடியாததால் கூலி வேலைக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்' என்றார்.

## வேளாண் பட்டதாரிகள் பண்ணை ஆலோசனை மையம் அமைக்க ரூ.3 லட்சம்

காரைக்கால், : காரைக்கால் மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பது: வேலை கிடைக்காத வேளாண் பட்டதாரிகள் பண்ணை ஆலோசனை மையம் மற்றும் சுய தொழில் ஆரம்பித்து நடத்துவதற்கு, புதுச்சேரி வேளாண்துறை மூலமாக ரூ.3 லட்சத்துக்கு மிகாமல் மானியம் அளிக்கப்படுகிறது. மேலும், வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் ஒரு வருட வேளாண் பயிற்சி பெற்ற வேலையில்லா நபர்களிடமிருந்து சுய தொழில் ஆரம்பிக்க ரூ.75 ஆயிரம் மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய விரும்புவோர் இந்த திட்டத்தின் வழி முறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை மாவட்ட வேளாண்துறை இணையதளம்(
ணீரீக்ஷீவீ.ஜீuபீuநீலீமீக்ஷீக்ஷீஹ்.ரீஷீஸ்.வீஸீ ) மூலம் பதிவிறக்கம் செய்து

கொள்ளலாம். அல்லது அந்தந்த பகுதி உழவர் உதவியகங்களில் பெற்றுகொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கூடுதல் வேளாண் இயக்குனர் காரைக்கால் அலுவலகத்தில் வருகிற பிப்ரவரி 10ம் தேதிக்குள் சேர்க்க வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் மதியழகன் கூறியுள்ளர்.

**வெற்றிலை விலை உயர்வு விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி**

கரூர், : கரூரில் வெற்றிலை ஏலம் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கரூர் வட்டாரத்தில் புகழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகு படி ஆயிரக்கணக்கான ஏ க்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெற்றிலை கொடிக்கால்களுக்கு காவிரியாற்று நீர் பாசன ஆதா ரமாக உள்ளது. புகழூர் பகுதி மற்றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண் டிக்கும், வேலுரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மா ர்க்கெட்டிற்கும் விற்பனை க்காக அனுப்பி வைக்கப் பட்டு வருகிறது. மேற்கண்ட வெற்றிலை மண்டிகளுக்கு திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், மோகனூர், பரம த்தி மற்றும் நாமக்கல் மாவ ட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை கொ ண்டு வருகின்றனர். இங்கு நடைபெறும் வெற்றிலை ஏலத்தில் கலந்து கொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இருந்து மெத்த வியாபாரிகள் வந்து வெற்றி லை ஏலம் எடுக்கின்றனர். லாரிகள் மற்றும் ரயில்கள் மூலம் மேற்கண்ட ஊர்களு க்கு வெற்றிலை அனுப்பப்படுகிறது. மேலும் கர்நா டகா, ஆந்திரா, கேரளா உத்தரபிரதேசம், மகாராஷ் டிரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் வெற்றிலை அனுப்பப்படுகிறது.

வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்திருந்த நிலையில், காவி ரியில் நீர்வரத்து காரணமாக நிலை மாறியது. காவிரியாற்று பாசனத்தில், இக்கரையில் உள்ள கரூர் மாவ ட்ட கிராமத்தினர் அக்கரையில் உள்ள நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூ ர் வெற்றிலை சந்தையில் வெற்றிலை விற்பனை செய்கின்றனர்.

கடந்த மாதத்தை விட தற்போது வெற்றிலைக்கு அதிக விலை கிடைத்துள்ளது. 104 கவுளிகளைக் கொண்ட ஒரு சுமைக்கு விலை வைத்து ஏலம் விடப்படுகிறது.

இளங்கால் கற்பூரி ரகம் முன்பு ரூ.2500க்கும், முதிகால் கற்பூரி ரூ.2ஆயிரத்திற்கும் விலை போனது. தற்போது இவை ரூ.4500, ரூ.3500 என்ற விலை கிடைத்தது. இதேபோல வெள்ளை க்கொடி இளங்கால் ரூ.45 00க்கும், முதிகால் வெள்ளைக்கொடி ரூ.4ஆயிரத்திற்கும் விற்பனையானது. கடந்த வாரம் வெள்ளைக் கொடி இளங்கால் ரூ.3500, முதிகால் ரூ.2500 என விலை இருந்தது. விலை அதிகம் கிடைப்பதால் வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில மாதங்களாக விலை போதுமானஅளவு கிடைக்கவில்லை. தற்போது விழாக்காலம் என்பதால் வெ ற்றிலை தேவை அதிகமாக இருக்கிறது. அதே வேளை யில் வெளி மாநிலங்களில் இருந்து வெற்றிலை வரத்து குறைந்து விட்டது. இதன் காரணமாக நல்ல விலை கிடைத்துக் கொண்டிருப்பதாக வெற்றிலை விவசாயிகள் தெரிவித்தனர்.

**கரூர் முன்னோடி விவசாயிக்கு வேளாண் செம்மல் விருது கோவை வேளாண் பல்கலை. வழங்கியது**

தோகைமலை, : கரூர் மாவட்டம் தோகைமலை அருகே புழுதேரி சரஸ்வதி வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிக்கு கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வேளாண் செம்மல் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள வேளாண்மை அறிவியல் மையத்தில் சாதனை புரிந்த முன்னோடி விவசாயிகளை உழவர் தின விழாவில், வேளாண்மை செம்மல் விருது பெறுவதற்கான போட்டிக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருந்தது.

கரூர் மாவட்டத்தின் சார்பாக தோகைமலை அருகே உள்ள கீழப்பட்டி முன்னோடி விவசாயி கரிகாலன் என்பவரை புழுதேரி சரஸ்வதி வேளாண்மை அறிவியல் மையம் பரிந்துரை செய்து அனுப்பியிருந்தது.

தொழில்நுட்ப வல்லுநர்களால் திருந்திய முறையில் நெல் சாகுபடி மற்றும் நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடி குறித்து பயிற்சி பெற்ற இவர், தொழில் நுட்பத்திற்காக

ஒரு கரும்பு கரணையில் ஒரு பரு என்ற அளவில் கரும்பு சாகுபடி செய்ய தொடங்கினார்.

கடந்த 2 ஆண்டுகளில் 7 லட்சம் ஒரு பரு நாற்றுகளை சாகுபடி செய்து இத்தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு எக்டேருக்கு 125 முதல் 135 டன் மகசூல் செய்து சாதனை செய்துள்ளார்.

இவர் வயலை ஒரு மாதிரி திடல் போன்று அமைத்து, 18 மாதங்களில் 2 ஆயிரம் விவசாயிகள் பார்வையிட்டு பயன் அடைந்துள்ளனர். மேலும் 25 மகளிர் குழுக்களுக்கு பயிற்சியும் அளித்துள்ளார். இதனால் வேளாண் அறிவியல் மையம் இவரை நபார்டு வங்கி நிதியுதவியுடன் முன்னோடி பயிற்றுநராக உருவாக்கியுள்ளது.

இவர் 2012 முதல் நபார்டு வங்கி நிதியுதவியுடன் நச்சலூர் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் அரசு நிர்ணயித்த விலையில், கடந்த ஆண்டு மட்டும் 450 டன் உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளார். இச்சாதனை மூலம் கோவை வேளாண் பல்கலைக்கழகம் இவருக்கு வேளாண் செம்மல் விருது அளித்து கவுரவித்து, பாராட்டியுள்ளது. இவர் புழுதேரி சரஸ்வதி வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி பெற்றவர் என்பவர் குறிப்பிடத்தக்கது.

**மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் உற்பத்தி தொடங்கியது**

மதுராந்தகம், : மதுராந்தகம் அடுத்த படாளம் கிராமத்தில் உள்ளது மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. இந்த ஆலையில் நேற்று அரவை துவங்கியது. மதுராந்தகம் மற்றும் அதனை சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து இந்த சர்க்கரை ஆ¬லைக்கு கரும்புகள் லாரிகளில்  வரத் தொடங்கியுள்ளன. சர்க்கரை உற்பத்திக்காக நேற்று முதல் அரவைத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. காலை 9 மணிக்கு தொடங்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில் பல்வேறு இயந்திரக் கோளாறு காரணமாக பகல் 1 மணிவரை அரவை தொடங்கவில்லை.

பின்னர்  இயந்திரங்கள் சரிசெய்யப்பட்டு கரும்பு அரவைத் துவங்கியது. தற்போது சுமார் 50 க்கும் மேற்பட்ட லாரிகளில் கரும்பு லோடுகள் வந்து இறங்கியுள்ளன.

**இலவச ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

ஈரோடு, : கிராமப்புறங்களில் வாழும் ஏழை குடும்பங்களுக்கு இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டில் 3,775 பயனாளிகளுக்கு 4 கோடியே 81 லட்சத்து 31 ஆயிரத்து 250 ரூபாய் செலவில் 15 ஆயிரத்து 100 ஆடுகளும், 2012-13ம் ஆண்டு மார்ச் வரை 4 ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு 5 கோடியே 41 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் செலவில் 16 ஆயிரத்து 984 ஆடுகளும், 2013-14ம்ஆண்டில் 2 ஆயிரத்து 861 பயனாளிகளுக்கு 5 கோடியே 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் 11 ஆயிரத்து 444 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில் 24 மற்றும் 25ம் தேதிகளில் மாவட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது.கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடைபெறவுள்ள இந்த முகாமில் ஆடுகள் வழங்கப்பட்ட அந்தந்த கிராமங்களில் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது. குடற்புழு நீக்கம் செய்வ தன் மூலம் ஆடுகளின் உடல் எடை கூடுவது மட்டுமின்றி நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் இனவிருத்தி திறன் அதிகரித்து ஆடுகளின் மூலம் கிடைக்கும் வருவாயும் அதிகரிக்கும். இந்த முகாமில் திட்ட பயனாளிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ள கலெக்டர் சண்முகம் கேட்டு கொண்டுள்ளார்.

**இழப்புகளை ஈடு செய்வதற்கு தென்னை மரங்களை காப்பீடு செய்யலாம் விவசாயிகளுக்கு அழைப்பு**

**சேதுபாவாசத்திரம்**, : வெள்ளம், புயல், வறட்சிகளால் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்ய தென் னை மரங்களை காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள **அறிக்கை**:

சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் 600 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெள்ளம், புயல், வறட்சி, எதிர்பாராத தீ விபத்து, ஆழிபேரலை மற்றும் இயற்கை சீற்றங்களால் மரங்கள் முழுமை யாக பாதிக்கப்பட்ட லோ அல்லது முற்றிலும் பலன் அளிக்காவிட்டாலோ இழப்பு ஏற்படும்போது அதை ஈடு செய்வதற்கு தென்னை மர காப்பீடு திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தனிப்பயிராகவோ, ஊடு பயிராகவோ, வரப்பு ஓரங்களிலோ, வீட்டு தோட்டங்களிலோ, குறைந்தபட்சம் பலன் தரக்கூடிய 10 மரங்களாவது சாகுபடி செய்திருக்க வேண்டும். ஆண் டுக்கு 30க்கும் மேற்பட்ட காய்கள் தரக்கூடிய மரங்களாக இருக்க வேண்டும். குட்டை மற்றும் ஒட்டுரக தென்னை மரங்கள் 4ம் ஆண்டு முதலும் நெட்டை மரங்கள் 7ம் ஆண்டு முதல் 60 ஆண்டு வரை காப்பீடு செய்யலாம்.

ஒரு ஹெக்டேருக்கு 175 மரங்கள் வரை மட்டுமே காப்பீடு செய்ய முடியும். காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமிய தொகை யை தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலேயே செலுத்தலாம். செலுத்த வேண்டிய பிரீமிய தொகை யில் 50 சதவீதம் மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியமும், 25 சதவீதம் மாநில அரசும் ஏற்று கொள்கின்றன. மீதமுள்ள 25 சதவீதம் மட்டுமே விவசாயிகள் செலுத்த வேண்டும். மேலும் 4 வயது முதல் 15 வயதுடைய மரம் ஒன்றுக்கு காப்பீட்டுத் தொகை ரூ.600. இதற்கான செலுத்த வேண்டிய பிரீமிய தொகை ரூ.4.25. இதில் விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை ரூ.1.06. அதேபோல் 16 வயது முதல் 60 வயதுடைய

மரம் ஒன்றுக்கு காப்பீட்டுத்தொகை ரூ.1,150. இதற்காக செலுத்த வேண்டிய பிரீமிய தொகை ரூ.5.75. இதில் விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை ரூ.1.43 ஆகும்.

எனவே அனைத்து விவசாயிகளும் தென்னைமர காப்பீடு செய்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண் மை உதவி இயக்குனர் அல்லது வேளாண்மை அலுவலர் அல்லது வேளாண் மை உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**தஞ்சை**, : தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 31ம் தேதி நடக்கிறது. இதில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விள க்கம் அளிக்கப்படவுள்ளது. என வே கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம் குறித்த கருத்து களை தெரிவிக்கலாம். இந்த கூட்டத்தில் பங்கேற்க விரும் பும் விவசாயிகள் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கம்ப்யூட்டரில் தங்களை குறித்த விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் வேலூர் மாவட்டத்தில் இன்று தொடங்குகிறது**



**வேலூர்,**

தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் வேலூர் மாவட்டம் முழுவதும் கால்நடை டாக்டர்களால் இன்றும் (வெள்ளிக்கிழமை), நாளையும் (சனிக்கிழமை) அந்தந்த கிராமப்பகுதிகளில் மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது.

இதில் கலந்து கொள்ளும் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கமும் செய்யப்படும். இதனை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தகவலை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 7 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது விவசாயிகள் மகிழ்ச்சி**



**நாமக்கல்,**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 7 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு, துணை தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன் னிலையில் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 7 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

<u>ரூ.1½ கோடிக்கு விற்பனை</u>

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 800 முதல் ரூ.5 ஆயிரத்து 689 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி ரூ.7 ஆயிரத்து 200 முதல் ரூ.7 ஆயிரத்து 849 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 300 முதல் ரூ.6 ஆயிரத்து 6 ஆயிரத்து 570 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். இந்த வாரம் பருத்தி மூட்டை வரத்தும் அதிகரித்து விலையும் அதிகம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கால்வேஅள்ளியில் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளுக்கு மருத்துவ முகாம்**



**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழக முதல்–அமைச்சரின் சிறப்பு திட்டத்தின் கீழ் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் பெற்ற பயனாளிகளில் கறவை மாடுகள் மற்றும் ஆடுகளை சிறப்பாக பராமரித்து வருபவர்களுக்கு வருகிற தமிழ் புத்தாண்டு தினத்தில் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இந்தநிலையில் விலையில்லா கறைவ மாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) மற்றும்

நாளை (சனிக்கிழமை) ஆகிய 2 நாட்கள் காவேரிப்பட்டணம் ஒன்றியம் கால்வேஅள்ளி கிராமத்தில் இனப்பெருக்க பரிசோ தனை, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. இதை விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் பெற்றவர்கள் மட்டுமின்றி மற்ற விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளும்மாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

**தச்சூர் கிராமத்தில் உலக வங்கி குழுவினர் ஆய்வு**




**கள்ளக்குறிச்சி,**

கள்ளக்குறிச்சி வட்டாரம் தச்சூர் கிராமத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ஒரு விவசாயியின் வயலில் திருந்திய நெல் சாகுபடி மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த வயலை உலக வங்கி குழு ஆலோசகர் பால்சித்து, வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட கலெக்டர் சம்பத் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். பின்னர் விவசாயிகளிடம் திருந்திய நெல் சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் குறித்து கலந்துரையாடினர்.ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி, துணை இயக்குனர் ராஜேந்திரன், உதவி இயக்குனர் தர்மலிங்கம், திண்டிவனம் வேளாண் அறிவியல் கல்லூரி பேராசிரியர் சாத்தையா ஆகியோர் உடனிருந்தனர்.

## திண்டுக்கல்லில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை தொடங்கியது



### தர்ப்பூசணி பழங்கள்

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனைக்கு வரத்தொடங்கும். ஏப்ரல் மாதம் வரை பழங்கள் விற்பனைக்கு வரும். ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதம் கடைசியிலே தர்ப்பூசணி பழங்கள் விற்பனை தொடங்கியது. திண்டிவனத்தில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட தர்ப்பூசணி பழங்கள் தற்போது விற்பனைக்கு வந்து குவிந்து உள்ளன. காரணம், திண்டுக்கல் மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவமழை இல்லாததால் வேடசந்தூர், குஜிலியம்பாறை, ஈசாநத்தம் ஆகிய பகுதிகளில் தர்ப்பூசணி பழங்கள் விளைச்சல் குறைந்து உள்ளது.

### கிலோ ரூ.15–க்கு விற்பனை

மேலும் மாவட்டத்தில் விளையும் தர்ப்பூசணி பழங்களின் அளவு சிறியதாகவும், இனிப்புசுவை குறைவாக இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் வியாபாரிகள் வெளிமாவட்டங்களில் விளையும் தர்ப்பூசணி பழங்களை வாங்கி வந்து விற்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. தற்போது விற்பனைக்கு வந்து உள்ள தர்ப்பூசணி பழங்கள் சுமார் 4 கிலோ முதல் 8 கிலோ வரை எடை உள்ளது. ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவையில்லாமல் தர்ப்பூசணி பழங்களை வெட்டி ஒரு துண்டுகள் ரூ.10–க்கு விற்கப்படுகிறது.

திண்டுக்கல்லில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை ‘சீசன்’ முன்கூட்டியே தொடங்கியதால், ஏராளமானவர்கள் பழங்களை வாங்கிச் சென்றனர்.

## ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் முருங்கைக்காய் விலை குறைந்தது கிலோ ரூ.60–க்கு விற்பனை



ஆணடிப்பட்டிவட்டாரத்தில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.200 என உச்சத் தில் இருந்த முருங்கைக்காய் விலை தற்போது ரூ.60–ஆக சரிந்துள்ளது. இருப்பினும் சில்லறை விற்பனையில் முருங்கைக்காய் விலை அதிகரித்தே காணப்படு கிறது.

<u>முருங்கைக்காய்</u>

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி வட்டாரத்திலும், கடமலை–மயிலை ஒன்றியத் திலும் உள்ள பல்வேறு கிராமங் களில் முருங்கை விவசாயம் அதிகளவில் உள்ளது. பொதுவாக முருங்கைக்காய் தண்ணீர் பற்றாக்குறையான கோடைக்காலத்திலும் அதிக மகசூல் கொடுக்கும்.

கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை மிகக்குறைந்த அளவே பெய்தது. மேலும் கடும்பனி காரணமாக ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் முருங்கைக்காய் விளைச்சல் சமீபகாலமாக குறைந்து காணப்பட்டது.

ஆண்டிப்பட்டி சந்தைக்கு முருங்கைக்காய் வரத்து குறைவாக காணப்பட்ட நிலையில், கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.200 முதல் ரூ.250–வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது பனியின் தாக்கம் குறைய தொடங்கி உள்ள நிலையில், கடந்த சில நாட்களாக சந்தைக்கு முருங்கைக்காய் வரத்து படிப்படியாக அதி கரித்து வருகிறது. இதனால் உச்சத்தில் இருந்து வந்த முருங்கைக்காய் விலை சீராக குறைந்து கொண்டே வந்தது.

<u>விலை குறைவு</u>

நேற்றைய நிலவரப்படி ஆண்டிப்பட்டி சந்தையில் முருங்கைக்காய் கிலோ ரூ.60–ஆக சரிந்து காணப்பட்டது. இந்த விலை ஓரளவு கட்டுப்படி யாகும் விலை என்று முருங்கை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். அதே நேரத்தில் சில்லறை விற்பனையில் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.80 முதல் ரூ.100 வரையில் விற்பனை செய்யப்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதியுற்ற னர்.

பெரும்பாலான சில்லறை விற்பனை காய்கறி கடைகளில் 3 முருங்கைக்காய்கள் ரூ.20–க்கு விற்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கோடை காலம் தொடங்க உள்ளதால் முருங்கை விளைச்சல் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே இனிவரும் நாட்களில் முருங்கைக்காய் விலை படிப்படியாக குறையும் என்று வியாபாரிகள் எதிர்பார்க் கின்றனர்.

**கடும் வறட்சியிலும் காய்கறி விளைச்சல்**



**தொண்டி,**

கடும் வறட்சியிலும் தெளிப்பு நீர் பாசனம் மூலம் காய்கறி விளைச் சலில் திருவாடானை விவசாயி சாதனை படைத்துள்ளார்.

<u>பருவமழை</u>

திருவாடானை தாலுகாவில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் பொய்த்து விட்டது. சராசரியை விட 40 சதவீதம் குறைவாக மழை பெய்துள்ளது. அந்த மழையும் நிலப்பரப்பை விட கடலில் தான் அதிகளவில் பெய்துள்ளது. இதனால் இந்த ஆண்டு திருவாடானை தாலுகாவில் சாகுபடி செய்யப்பட்ட சுமார் 45 எக்டேர் நிலப்பரப்பிலான நெற்பயிர்கள் கருகி விட்டது. இனி வரும் காலங்களில் விவசாயிகள் குறைந்த நாள் வித்துக்களையும், நெற் பயிர் மட்டுமல்லாது மாற்றுப்பயிர் களையும் சாகுபடி செய்ய வேண்டும் என்று வேளாண் துறை அதிகாரி கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.திருவாடானை தாலுகாவில் தற் போது கண்மாய், ஊரணி, குளங்க ளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுவதுடன் கடும் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை யில் பாண்டுகுடியை சேர்ந்த விவ சாயி பழனிவேல் தன்னுடைய 2 ஏக்கர் நிலத்தில் மிளகாய், தக்காளி, புடலங்காய், கத்தரிக்காய், வெங்கா யம், தட்டைப்பயறு போன்ற வற்றை விளைவித்து தெளிப்பு நீர் பாசனத் தின் மூலம் குறைவான தண்ணீரில் அதிக மகசூல் பெற்று சாதனை படைத்துள்ளார்.

<u>மாற்று விவசாயம்</u>

இதுகுறித்து பழனிவேல் 'தினத் தந்தி' நிருபரிடம் கூறிய தாவது:– திரு வாடானை தாலுகாவில் தொடர்ந்து விவசாயம் பாதிக்கப் பட்டு வருகிறது. இதனால் நெல்லுக்கு மாற்றுப்பயி ராக விவசாயம் செய்தால் குறைந் தளவு தண்ணீரை கொண்டு நல்ல விளைச்சல் பெறலாம் என்று எண்ணி காய்கறிகளை பயிர்வித்தேன். இதற் காக வேளாண்மை துறை மூலம் முதல்–அமைச்சரின் சிறப்பு திட்டத் தின் கீழ் பண்ணை குட்டை வெட்டி னேன். ஆனால் மழை இல்லாததால் தண்ணீர் சேமிக்க முடியவில்லை. இதையடுத்து கிணறு வெட்டி அதில் இருந்து தினமும் 5 ஆயிரம் லிட்டர் தண்ணீர் எடுத்து தெளிப்பு நீர் பாசனம் மூலம் 2 ஏக்கரில் காய்கறிகளை விளைவித்துள்ளேன். அரசு சார்பில் சொட்டு நீர் பாசன வசதி செய்து கொடுத்தால் அடுத்து ஆண்டு முதல் பழத்தோட்டம் அமைத்து

விவசாயம் செய்யலாம் என்று முயற்சித்து வருகிறேன். எனவே மாவட்ட கலெக்டர், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அதி காரிகள் அரசின் இலவச திட்டங் களை பெற்றுக்கொடுத்தால் இப்பகுதி விவசாயிகள் மாற்றுப்பயிர் செய்து பயன்பெற முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.

**மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் தென்னை மரங்களை சேதப்படுத்திய யானை கூட்டம்**



ராஜபாளையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தென்னை மரங்களை யானைகள் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**யானைகள் கூட்டம்**

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் ராஜபாளையம் அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி பகுதியில் அதிகளவில் யானை, மான், செந்நாய், காட்டெருமை, சாம்பல் நிற அணிகள் அதிகம் காணப்படுகிறன்றன. தற்போது கடும் வெயிலால் வனப்பகுதிகளில் தண்ணீர் கிடைக்காததால் விலங்குகள் மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றன.

வனத்துறை சார்பில் வனப் பகுதியில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டும் போதிய தண்ணீர் இல்லை. இதனால் தாகம் தீர்க்க தண்ணீரை தேடி வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமத்திற்குள் மான், பன்றி, மாடுகள் அடிக்கடி புகுந்து விடுகிறது.

இந்தநிலையில் ராஜபாளையம் அருகே மேற்கு உள்ள தொடர்ச்சி மலை வானுயூத்து ஊரணி பிறம்பு புல்லுப்பத்தி பகுதியில் ஜனரத்தனராஜா என்பவருக்கு சொந்தான விவசாய நிலம் உள்ளது. இங்கு தென்னை, மா மரங்கள் நடப்பட்டு இருந்தன. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு இந்த தோட்டத்துக்கு புகுந்த யானைகள் கூட்டம், 50 தென்னை மரங்கள் மற்றும் மா மரங்களை சேதப்படுத்தி விட்டு சென்றுவிட்டன. இதுகுறித்து தகவல் அறிந்ததும் வனவர்கள் முத்துகூடலிங்கம், சண்முகவேல், வேட்டை தடுப்பு காவலர் ராஜ்குமார், கந்தலட்சுமணன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர். அவர் விவசாயிகளிடம் சேதமடைந்த பயிர்களுக்கு நஷ்ட ஈடு பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதுகுறித்து தோட்ட காவலர் பாண்டியராஜ் என்பவர் கூறும்போது, தற்போது 8 காட்டு யானைகள் வரை வந்துள்ளன. இவைகள் தென்னை மரங்களை பிடுங்கி எரிந்து குருத்துவரை சேதப்படுத்தி உள்ளன என்றார். ராஜபாளையம் வனப்பகுதியில் அடிக்கடி இதுபோல் சம்பவங்கள் நடந்து வருகிறது. எனவே இப்பிரச்சினையை தடுக்க வனப்பகுதியில் வன விலங்குகளுக்கான தண்ணீர் தொட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு தண்ணீர் நிரப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சத்து குறைவால் நெல் பயிரில் இலைகள் நிறம் மாறுகிறது கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி விளக்கம்**



நெல் பயிரில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறத்தால் ஆன இலை எதனால் தோன்றுகிறது என்று தமிழ்நாடு பல்கலைக்கழக அம்பை நெல் ஆராய்ச்சி நிலைய மண்ணியல் பேராசிரியர் சு.ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறிஇருப்பதாவது:–

## நெல்லில் மஞ்சள் நிற இலை

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் உணவுப்பயிர்களில் முக்கியமானது நெல். நெல்லை மாவட்டத்தில் இந்த ஆண்டு பிசான பருவத்தில் மட்டும் சுமார் 70.000 ஹெக்டர் நிலங்களில் பயிரிடப்பட்டு உள்ளது. இந்நெல் பயிர்களில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறம் அடிஇலைகளில் இருந்து மேல் இலைகள் வரை தோன்றும். இந்த அறிகுறி பெரும்பாலும் அம்பை 16 மற்றும் திருப்பதிசாரம் 4 நெல் ரகங்களில் அதிகபடியாக காணப்படுகிறது.

முதலில் அடி இலைகள் வெளிறி மஞ்சள் நிறத்துடன் காணப்படும். பின்னர் இவ்வறிகுறி தொடர்ந்து மேல் இலைகளில் தோன்றும். அறிகுறிக்கான காரணங்களை சரிசெய்யாமல் இருந்தால் இலைகள் மஞ்சள் நிறத்தில் இருந்து ஆரஞ்சு நிறமாக மாறி இலையின் நுனி திசுக்கள் இறந்து காய்ந்து சருகுகளாக மாறும். இவ்வாறு நெல்லின் அடி இலையில் இருந்து நுனி இலை வரை காய தொடங்கும். காய்ந்த இலைகளினால் ஒளிச்சேர்க்கை செய்யமுடியாமல் மகசூல் குறையும். மேலும் இவ்வகையாக பாதிக்கப்பட்ட நெல் பயிரில் பக்க சிம்புகள் குறைந்து மகசூல் வெகுவாக பாதிக்கப்படும்.

## அறிகுறிக்கான காரணங்கள்

நெல்லில் மஞ்சள் கலந்து ஆரஞ்சு நிற இலை தோன்றுவதற்கு முக்கியமாக 2 காரணங்களான மண்ணில் சாம்பல் சத்து பற்றாக்குறை மற்றும் மண்ணில் இரும்பு சத்தின் கிடக்கை அதிகமாதல் என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வருகிறது. இந்த பாதிப்பு வயல் முழுவதும் (ஓரத்தில் இருந்து நடுவயல் வரை) காணப்பட்டால்

சாம்பல் சத்து பற்றாக்குறையினால் இப்பாதிப்பு ஏற்படுகிறது என்றும், வயலின் நடுப்பகுதியில் மட்டும் காணப்பட்டால் இப்பாதிப்பு இரும்பு சத்தின் கிடக்கை அதிகமாதலால் என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வருகிறது.மேலும் நெற்பயிரில் தேவைக்கு குறைவாக உரங்களை இடுவதாலும் சமச்சீரற்ற ஊட்டசத்துக்களை அளிப்பதாலும் தொடர்ந்து நிலங்களை காயவிடாமல் நீர் பாய்ச்சுவதாலும் இந்த பாதிப்பு அதிகமாகும். நெல் வயல்களில் பெரும்பாலும் இப்பாதிப்பு இந்த 2 காரணங்களாலும் ஏற்படுகிறது. திருத்திய நெல் சாகுபடி முறையை விட சாதாரண முறையில் சாகுபடி செய்யப்பட்ட நெல்லில் இப்பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது.

<u>தடுக்கும் முறைகள்</u>

நெல்லில் மஞ்சள் கலந்து ஆரஞ்சு நிற இலை தோன்றுவதை கட்டுப்படுத்த சாம்பல் சத்தை சற்று கூடுதலாக இடவேண்டும். அதாவது ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு சுமார் 90 கிலோ வரை பயிரின் வளர்ச்சி பருவத்துக்கு ஏற்ப பிரித்து இடவேண்டும். மேலும் காய்ச்சல் பாய்ச்சல் முறையில் நீர்மேலாண்மையை கையாளுவதால் இப்பாதிப்பை தவிர்க்கலாம். மேலும் வளர்ச்சிடைந்த நெல்லில் இப்பாதிப்பை தவிர்ப்பதற்கு 2 சதவீதம் டி.ஏ.பி. மற்றும் ஒரு சதவீதம் யூரியா மற்றும் ஒரு சதவீத பொட்டாஷ் ஆகியவற்றை 15 நாட்களுக்கு ஒரு முறை கைதெளிப்பான் மூலம் பாதிக்கப்பட்ட பயிர் முழுவதும் நனையுமாறு தெளிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**தூத்துக்குடி அருகே அதிக அளவில் பிடிபடும் ஷீலா மீன்கள்**



தூத்துக்குடி அருகே தருவைகுளம் பகுதியில் அதிக அளவில் ஷீலா மீன்கள் பிடிபட்டு வருகின்றன.

<u>ஷீலா மீன்கள்</u>

தூத்துக்குடி அருகே உள்ள தருவைகுளத்தில் நாட்டுபடகுகள் மற்றும் விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். அந்த வகையில் சமீபகாலமாக மீன்களின் வரத்து குறைந்து காணப்படுவதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில் தருவைகுளம் மீனவர்களின் வலைகளில் ஷீலா, பெரிய கட்டா, கிழவாளை போன்ற மீன்கள் பிடிபட்டு வருகின்றன.

இதில் 10 கிலோ எடை கொண்ட ஷீலா மீன் ரூ.500–க்கும், அதற்கு குறைவான எடை கொண்ட மீன்கள் ரூ.420 வரையும் விற்பனையாகி உள்ளது. கிழவாளை மீன்கள் சுமார் 40 கிலோ எடை வரை வளரக்கூடியது. இந்த மீன்கள் ஒரு கிலோ ரூ.120–க்கு விற்பனையானது. அதே போன்று ஐலஸ் என்னும் மீன்களும் சமீபத்தில் அதிகமாக பிடிபட்டு வருகின்றன.

<u>வரத்து குறைவு</u>

இது குறித்து மீனவர் பக்ருதீன் கூறும் போது, தருவைகுளம் பகுதியில் மீன்களின் வரத்து குறைந்து உள்ளது.அதே நேரத்தில் ஷீலா மீன்கள் தொடர்ந்து பிடிபட்டு வருகின்றன. கடந்த 2 மாதங்களுக்கு பிறகு தற்போது பெரிய கட்டா போன்ற மீன்கள் வலையில் சிக்குகின்றன. மீன்களின் வரத்து குறைவாக இருப்பதால், விலை அதிகரித்து உள்ளது என்று கூறினார்.

**தூத்துக்குடி பூமார்க்கெட்டில் விற்பனைக்காக குவிந்த காரனேசன் பூக்கள்**



தூத்துக்குடி பூ மார்க்கெட்டில் விற்பனைக்காக ஏராளமான காரனேசன் பூக்கள் குவிந்து உள்ளன.

**பூக்கள்**

தூத்துக்குடி பூ மார்க்கெட்டுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இதில் ஊட்டி, ஓசூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து புதிய ரகங்களில் விதவிதமான பூக்கள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஓசூரில் இருந்து காரனேசன், புளுடேசி, ஜெரிபுரா போன்ற பூக்கள் அதிக அளவில் விற்பனைக்கு வந்து உள்ளது.


**விலை விவரம்**

இதில் 20 பூக்கள் கொண்ட ஒரு கட்டு காரனேசன் பூக்கள் ரூ.200–க்கும், ஒரு கட்டு புளுடேசி பூக்கள் ரூ.70–க்கும், 10 பூக்கள் கொண்ட ஒரு கட்டு ஜெரிபுரா பூக்கள் ரூ.70–க்கும், ரோஜா பூக்கள் ரூ.100 முதல் 120–க்கும், ஒரு கிலோ பைவ்ஸ்டார் ரூ.1000–க்கும், ஒரு கிலோ மல்லி ரூ.1000–க்கும், ஒரு கிலோ பிச்சிப்பூ ரூ.500–க்கும், ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.500–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## அலங்காரம்

இது குறித்து பூ வியாபாரி பட்டுராஜ் கூறும் போது, தூத்துக்குடி மார்க்கெட்டுக்கு காரனேசன், புளுடேசி, ஜெரிபுரா, பைவ்ஸ்டார் போன்ற பூக்கள் அதிகமாக வருகின்றன. காரனேசன் பூக்கள் ஒரு வாரம் வரை காயாமல் இருக்க கூடியது. அதே போன்று சைப்ரஸ், கோல்டன், ஆஸ்பரஸ் போன்ற இலைகளும் விற்பனைக்காக வந்து உள்ளன. இந்த பூக்கள் தோரணங்கள், அலங்காரங்கள், மாலைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

**தூத்துக்குடியில் வியாபாரி வீட்டில் காய்த்த வாத்து பப்பாளிக்காய்**



**தூத்துக்குடி,**

தூத்துக்குடி அருகே உள்ள ராஜீவ்நகரை சேர்ந்தவர் சுலோசன பாண்டி. இவருடைய வீட்டில் பப்பாளி மரங்கள் வளர்த்து வருகிறார். இதில் ஒரு மரத்தில் காய்த்த காய் மயில் வடிவிலும், வாத்து போன்றும் காட்சி அளித்தன. இதனை பார்த்த சுலோசன பாண்டி, அந்த காய்களை பறித்து வைத்து இருந்தார். இதே போன்று அத்திமரப்பட்டியை சேர்ந்த ராஜேந்திரபூபதி என்பவர் கடைக்கு வந்த மஞ்சள் குருவி போன்று தோற்றம் அளித்தது. இதனை அக்கம் பக்கத்தில் இருந்த மக்கள் ஆர்வமுடன் பார்த்து சென்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## திண்டுக்கல் சந்தையில் ரூ.1 கோடி வெங்காயம் தேக்கம்: வியாபாரிகள் போராட்டத்தால் விவசாயிகள் மறியல்



திண்டுக்கல் வெங்காயம் கமிஷன் மண்டி சந்தையில் ஏற்றுமதி வியாபாரிகள் போராட்டம் காரணமாக புதன்கிழமை ரூ.1 கோடி மதிப்புள்ள 10,000 வெங்காயம் மூட்டைகள் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகாமல் தேக்கமடைந்தன. வியாபாரிகள் போராட்டத்தால் அதிருப்தியடைந்த விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் தாடிக்கொம்பு சாலை வெங்காயப் பேட்டையில் தமிழகத்திலே மிகப்பெரிய வெங்காயக் கமிஷன் மண்டி சந்தை செயல்படுகிறது.

இந்தச் சந்தையில் 200-க்கும் மேற்பட்ட வெங்காய கமிஷன் மண்டிக் கடைகள் செயல்படுகின்றன. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், தேனி, கரூர், திருச்சி, கோவை, ஈரோடு மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில்

விளையும் வெங்காயத்தை இந்த கமிஷன் மண்டி கடைகளில் விற்பதற்காகக் கொண்டு வருகின்றனர்.

கமிஷன் மண்டி வியாபாரிகள், கமிஷன் அடிப்படையில் விவசாயிகளிடம் வெங்காயத்தை கொள்முதல் செய்து, ஏற்றுமதி வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். அவர்கள், வெங்காயத்தை வாங்கி தமிழகத்தின் பிற மாவட்டங்கள், கர்நாடகம், கேரளம், வடமாநிலங்களுக்கும், சிங்கப்பூர், இலங்கை, மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். இந்த வெங்காய மண்டி சந்தை வாரந்தோறும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமை நாள்களில் கூடுகிறது.

இந்த நிலையில் வெங்காய கமிஷன் மண்டியில் கமிஷன் வியாபாரிகள், ஏற்றுமதி வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து அடிமாட்டு விலைக்கு வெங்காயத்தைக் கேட்பதாகவும், மாதிரி எடுப்பதாகக் கூறி மூட்டைக்கு 5 கிலோ மச்சக்காய் கேட்பதால் நஷ்டமடைவதாகவும் விவசாயிகள், திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியரிடம் புகார் செய்தனர். வருவாய்த் துறையினர் வெங்காய கமிஷன் கடைகளில் விசாரணை நடத்தி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் ந.வெங்கடாசலம் உத்தரவிட்டார்.

இதையடுத்து, திண்டுக்கல் தாசில்தார்கள் (மேற்கு) சிந்தாமணி, (கிழக்கு) வரதராஜன் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் கடந்த திங்கள்கிழமை வெங்காய மண்டி கடைகளில் அதிரடி சோதனை மேற்கொண்டு விவசாயிகளிடம் மச்சக்காய் கேட்கக்கூடாது எனவும், சிண்டிகேட் அமைக்காமல் உற்பத்திக்கு ஏற்ற நியாயமான விலையை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என கமிஷன் மண்டி வியாபாரிகள், ஏற்றுமதி வியாபாரிகளை எச்சரித்தனர்.

அதனால், புதன்கிழமை கூடிய சந்தையில் கமிஷன் மண்டி வியாபாரிகள், ஏற்றுமதி வியாபாரிகளுக்கு மச்சக்காய் வழங்கவில்லை. அதிருப்தியடைந்த ஏற்றுமதி

வியாபாரிகள் விவசாயிகள் கொண்டுவந்த வெங்காயத்தை வாங்காமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனால், வெங்காய மண்டி கடைகளில் ரூ.1 கோடி மதிப்புள்ள 10,000 மூட்டை வெங்காயம் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகாமல் தேக்கமடைந்தன. இதனால் அதிருப்தியடைந்த விவசாயிகள், வியாபாரிகளைக் கண்டித்து தாடிக்கொம்பு சாலையில் மறியலில் ஈடுபட்டனர். டி.எஸ்.பி. ராமச்சந்திரன், இன்ஸ்பெக்டர் புகழேந்தி மற்றும் போலீஸார் விவசாயிகளை சமாதானம் செய்தனர்.

இதுகுறித்து ஏற்றுமதியாளர்கள் வர்த்தக சங்கத் தலைவர் சௌந்தர்ராஜனிடம் கேட்டபோது, வெளிமாநிலங்கள், வெளிநாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய முதலில் அவற்றின் மாதிரியை அனுப்ப வேண்டும். அதனால், மச்சக்காய் எடுக்கிறோம். மச்சக்காய் அனுப்பாவிட்டால் அவர்கள் ஆர்டர்களை வழங்குவதில்லை. தமிழகத்தின் மற்ற வெங்காய மார்க்கெட்டுகளைவிட இங்கு கூடுதல் விலைதான் நிர்ணயம் செய்கிறோம். பேச்சு மூலம் தீர்வுகாண விவசாயிகள்தான் வர மறுக்கின்றனர் என்றார்.